**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 79 /2020 PW .7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அரங்கநாயகி | தந்தை/கணவர் பெயர்: | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : ஆய்வாளர் |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026

---

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.)**

**11.03.2026 முதல் விசாரணை:**

1.நான் தற்போது மதுரை மாநகரம் அவனியாபுரம் குற்றபிரிவில் காவல் ஆய்வாளாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.02.2019 ம் தேதி நெற்குப்பை காவல் நிலைய குற்ற எண் 4/2019 யில் இதச பிரிவுகள் 147,148, 324, 506(1), 427,379 மற்றும் 4 of TNPWH Act வழக்கை சார்பு ஆய்வாளர் கருணாநிதி முதல் விசாரணை முடித்து வைத்திருந்த நிலையில் நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு ஏற்கனவே அவர் விசாரித்த சாட்சிகளை மீண்டும் விசாரணை செய்த போது அவர்கள் ஏற்கனவேக்குரிய வாக்குமூலத்தை என்னிடம் கூறினார்கள் . நான் காயம்பட்ட அ.சா.1 சொர்ணாம்பிகாவை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. பின்னர் காயம்பட்ட அ.சா.1 க்கு மருத்துவ சிகிச்சை அளித்த பொன்னமராவதி அரசு மருத்துவமனை மருத்துவர் ஜனனி பிரியா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயம் சான்று பெற்றேன் . வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை 324, 506(2), 427, 326 இதச மற்றும் 4 of TNPWH Act ன் கீழ் மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் செய்து 11.03.2019 ம் தேதியன்றே மாறுதல் செய்யப்பட்ட சட்டப்பிரிவிகளின் கீழ் எதிரிகளின் மீது குற்றஇறுதியறிக்கை தாக்கல் செய்தேன். **(மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ .த.சா.ஆ–8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

3.இவ்வழக்கில் செல்போன், ஸ்டெம்பர் கைப்பற்றவில்லை என்றால் சரிதான் . ஆயுதங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சம்பவ நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த புதுக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவரை விசாரித்து வாக்குமூலம்பெற்று வழக்கு சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான் . புதுக்கோட்டை அரசு மருத்துவர் காயம்பட்ட நபருக்கு முழு சிகிச்சை செய்த மருத்துவர் என்றால் சரிதான். 1,2 எதிரிகளின் மகன்கள் மூன்று பேரையும் , வழக்கிலிருந்து நீக்கம் செய்து குற்றஇறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . அ.சா.1 க்கு காயம் அதிகமாக இருந்ததால் மறுவாக்குமூலம் பதிவு செய்தேன் . புதுக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவரிடமிருந்து நுண்கதிர் படம் எதுவும் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்ற விவரங்கள் தெரியாது. சம்பவ நேரத்தில் அ.சா.1 யை தவிர வேறு யாரும் இருந்ததார்களா என்றால் சாட்சிகள் இருந்தார்கள் . காயம்பட்ட சொர்ணாம்பிகா புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு வந்தவரை புகார் வாங்காமல் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து மருத்துவமனையில் வைத்து புகார் பெறப்பட்டது என்றால் சரிதான் . மருத்துவ நமுனா மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் . மேற்படி விவரத்தை சார்பு ஆய்வாளர் விசாரணையில் சொல்லி உள்ளரா என்றால் எனது விசாரணையில் சொல்லி உள்ளார் . மருத்துவ நமுனா வழக்கல் தாக்கல் செய்யப்படவில்லை . எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியாக புலன் விசாரண செய்யாமல் எதிரிகள் மீது தவறாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.